1975 அக்டோபர் 28]

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தை வேறு இடத்திற்கு மாற்றும் உத்தேசம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.

திரு. ஆ. கு. சுப்பையா: தலைவரவர்களே, இந்த ஆண்டு வறட்சியின் காரணமாக நிலச் சொந்தக்காரர்களுக்கு . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அந்தக் கேள்வி முடிந்து, அடுத்த கேள்வி 98-ம் கேட்கப்பட்டு, பதில் சொல்லியாகி விட்டது.

ஒகேனக்கல் நீர்மின் திட்டம்

*99. **வினா—திரு. என். மாணிக்கம்:**
திரு. என். கே. பழனிசாமி:
திரு. ரா. ரா. முனுசாமி:
திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு தொழில்-மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்மையில் தருமபுரி மாவட்டம், ஒகேனக்கலில் புதிய நீர் மின் நிலையம் ஏற்படுத்துவது சம்பந்தமாக கர்நாடக அரசின் சார்பிலும் தமிழ்நாடு அரசின் சார்பிலும் பேச்சு வார்த்தை நடைபெற்றதா?

(இ) ஆம் எனில் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) தமிழகப் பொதுப் பணித் துறை அமைச்சருக்கும் கர்நாடக பொதுப்பணி மின்சக்தி அமைச்சருக்கும் இடையே 5—6—1974 அன்று அமைச்சர்கள் நிலையில் ஹொகேனக்கலில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது சில முடிவுகள் எடுக்கப்பட்டன. ஆற்றின் பல்வேறு பகுதிகளிலிருந்து மின் சக்தி உற்பத்தி செய்வதற்கான தகுந்த செயற் குறிப்புகளை இரு மாநிலங்களும் வகுக்க வேண்டும். அந்தந்த வட்டாரத்தின் நலனை நிறைவு செய்யும் வகையில் மிகவும் ஆதாயம் தரத்தக்க,

சிக்கனமான திட்டத்தை வகுப்பதற்கான கருத்துப் பரிமாற்றங்கள் அதன் பின்னர் மேற்கொள்ளப்படும் என்பவையே மேற்சொன்ன முடிவுகளாகும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இது வரை நடத்திய பேச்சு வார்த்தைகளில் முடிவு ஏதேனும் எடுக்கப்பட்டிருக்கிறதா ? இந்தப் பணி எப்போது தொடங்கப்படும் என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, இது பற்றி முடிவு எடுக்கப்படவில்லை. காவிரி ஆற்றில் இருக்கக் கூடிய மின் சக்தியை இரு மாநிலங்களுக்கும் உபயோகப் படுத்திக் கொள்ள பேச்சுவார்த்தை நடைபெற்றது. இப்போது இதிலே 100 டி.எம்.சி. முதல் 400 டி.எம்.சி. வரை ஆற்றின் பல்வேறு பகுதிகளில் மின் சக்தி உற்பத்தி செய்வதற்கான வாய்ப்பு இருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. இரு மாநில அமைச்சர்கள் மட்டத்தில் பேச்சு வார்த்தை முடிந்த பிறகு, இரண்டு மாநில அதிகாரிகள் அளவில் பேச்சுவார்த்தை நடைபெற்றிருக்கிறது. இது மேலும் பேச்சு வார்த்தைகள் நடத்தி முடிவு எடுக்க வேண்டிய விஷயமாகும்.

திரு. என். கே. பழனிசாமி : தலைவரவர்களே, ஹொகனேக்கல் திட்டத்தோடு இன்னொரு திட்டத்தைச் சேர்த்துத்தான் இதிலே பவர் ஹவுஸ் கட்டுவதான திட்டம் இருக்கிறது என்று கருதுகிறேன். இதனால் எவ்வளவு மெகா வாட் பவர் கிடைக்கும். எவ்வளவு செலவாகும் என்று உத்தேசமாக மதிப்பிட்டிருக்கிறதா ? இந்த சர்க்கார் மைசூர் சர்க்காரோடு சேர்ந்து செய்யக் கூடிய திட்டம் என்று சொல்வதைக் கேட்டு வரவேற்கிறோம். பேச்சு வார்த்தை நடந்து ஒரு ஆண்டு ஆயிற்று. ஒரு ஆண்டு கழித்தும் முடிவு ஏற்படவில்லை என்றால் சர்க்கார் மெதுவாக இதில் செயல் படக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, இந்த விஷயம் குறித்து மேற்கொண்டு விவாதங்கள் மின் சக்தி வாரிய அதிகாரிகளால் கர்நாடக தலைவர்களுடனும், மின் சக்தி கார்ப்பரேஷனுடனும் நடத்தப்பட்டது. பொறியாளர்களும் பல்வேறு குறிப்புகளைத் தயாரித்து வருகிறார்கள். இறுதி வடிவம்

1975 அக்டோபர் 28]

அளிக்க இன்னும் சிறிது காலம் ஆகும் என்று தெரிவித்திருக்கிறார்கள். இதற்கிடையில் கீழ் காவிரி வளர்ச்சித் திட்டம் பற்றிக் கலந்து விவாதிக்கப்பட்டது. காவிரி நீர் குறித்து அரசுகளின் நிலையில் விவாதம் நடப்பதற்கு முன்னாலே பொறியாளர் கூட்டம் நடைபெறவில்லை. இதில் நம் மாநிலத்தின் நிலை, இந்தத் திட்டத்திற்கு ஏற்படக்கூடிய செலவினை அறிந்து அதில் பங்கு கொள்வதற்குத் தயார் என்று நம் அரசு கருத்து தெரிவித்திருக்கிறது. இது இரண்டு மாநிலங்களுக்கும் பயன் தரத் தக்க திட்டமாகும். இதனால் நம் மாநிலத்தில் மின்சாரப் பற்றாக்குறை நீங்கும். இது பெரிய திட்டம் என்ற அளவிலே இரண்டு மாநிலங்களும் சேர்ந்து நிறைவேற்றலாம். நாம் பங்கு கொள்ளத் தயார். தேவையான நிதிக்கு, மத்திய அரசும் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, இந்த ஹோகனேக்கல் திட்டம் பற்றி 10 ஆண்டுகளுக்கு முன்னாலே நம் தமிழக அரசும், மைசூர் அரசும் பேச்சு வார்த்தை நடத்தி, அங்கேயிருக்கிற தலைமைச் செயலாளர் சென்னை நகரத்திற்கு வந்து பேச்சு வார்த்தையெல்லாம் நடத்தி மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்களால் கைவிடப்பட்டது. அப்போதே 80 கோடி ரூபாய்க்குத் திட்டம் தயாரிக்கப்பட்டு, ஆயிரம் மெகாவாட் தயாரிக்கக்கூடும் என்று என்ஜினியர்களால் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டில் தொழில் வளம் பெருகி வருகிற நேரத்தில் மின்சாரப் பற்றாக்குறை ஏற்படுகிற காரணத்தினால் இப்போதாவது அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுத்து இந்த ஆயிரம் மெகாவாட் கிடைக்கக் கூடிய திட்டத்தைப் பற்றி மைசூர் மாநில முதலமைச்சரவர்களோடு கலந்து பேசி விரைவாக நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்வார்களாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, இது பெரிய திட்டம். இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலமாக நம்முடைய மாநில அரசினுடைய மின்சாரப் பற்றாக்குறை நீங்கும். இந்தத் திட்டத்தைப் பற்றி ஏற்கெனவே நம்முடைய பொதுப் பணித்துறை அமைச்சரவர்கள் பேச்சு வார்த்தை நடத்தியிருக்கிறார்கள். மீண்டும் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தவிருக்கிறோம். அதிகாரிகள் மட்டத்தில்,

அதிகாரிகள் விவரங்களைச் சேகரித்திருக்கிறார்கள். மீண்டும் தொடர்ந்து மைசூர் மாநிலத்தோடு தொடர்புகொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : ஒகேனக்கல் திட்டம் சம்பந்தமாக சர்வே செய்யப்பட்டு, எவ்வளவு மதிப்பீடு என்பதெல்லாம் திரு. பக்தவத்சலம் முதலமைச்சராக இருந்தபோதே செய்யப்பட்டதே, அப்போது போடப்பட்ட திட்டத்தின் மதிப்பீடு என்ன? அதில் எவ்வளவு ஏரியா அடங்கும், பாசனத்திற்குப் பயன்படுமா? நம் அரசாங்கம் எந்த வகையில் அதை அமைக்க இருக்கிறது என்பதை எல்லாம் தெரிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : என்னிடத்திலுள்ள புள்ளி விவரங்களின்படி இது சம்பந்தப்பட்ட பல்வேறு ஏற்பாடுகளைச் சீர்தூக்கி ஆராய்ந்து பார்த்தே இறுதி வடிவம் கொடுப்பது பற்றி ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதாகும். மற்ற விவரம் என்னிடத்தில் இல்லை.

Thiru B. VENKATASWAMY : We are in large deficit of electricity. May I know from the Hon. Minister whether there is any proposal to expedite the Hogenakkal programme and see that it is implemented early ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கருநாடக மாநில அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தியே முடிவு செய்ய வேண்டும்.

திரு. அ. ஆறுமுகம் : காவேரி ஆற்றில் மேட்டூருக்கும், பவானிக்கும் இடையில் நீர் மின்விசைத் திட்டம் அமைக்க ஆராய்ச்சி செய்யப்பட்டது. அதற்காக 40 ஏக்கரா கூட நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது. அந்தத் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது, எப்போது முடியும் என்று அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதற்குத் தனியாகக் கேள்வி போடவேண்டும்.

Upper Thambaraparani Electricity Scheme.

* 100 Q.—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state :

(a) whether Upper Thambaraparani Hydro Electricity Scheme has been included in the 5th Five Year Plan; and

(b) if so, the details of the same?